

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி


www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 135 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 09 – செவ்வாய்க்கிழமை 24 டிசம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 135: Thiruvalluvar Year - 2055 - Margazhi 09 - Tuesday 24 December 2024 - Madurai 12 Pages ₹ 5.00


## தேர்தல் நடத்தை விதிகளில் திருத்தம்:

# மக்களாட்சிக்கு மிகப் பெரும் அச்சுறுத்தல்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களில் 64 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், என மொத்தம் 99 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, டிச. 24-

**தேர்தல் நடத்தை விதிகளில் செய்யப்பட்டுள்ள ஆபத்தான திருத்தத்தால் மக்களாட்சி முறைக்கு மிகப்பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. என்றும், மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் அழுத்தத்துக்கு தேர்தல் ஆணையமும் பணிந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது என்றும் குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டன அறிக்கை ஒன்றை தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

தேர்தல் நடத்துவதில் வெளிப்படைத் தன்மையை உத்தரவாதப்படுத்துவதற்காக தேர்தல் ஆணையம் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளுடன் கருத்துக்கள் பெற்று, மின்னணு சாதனங்களையும், வீடியோக்களையும், மின்னணு பதிவுகளையும் அரசியல் கட்சிகளும், அவைகளின் வேட்பாளர்களும் பயன்படுத்த அனுமதித்திருந்ததை தடுத்திடும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இப்போது தேர்தல் நடத்தை விதிகளில் சில திருத்தங்களைக் கொண்டு வர முன்மொழிந்து தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரைத்து அனுப்பியுள்ளது.

அதற்குத் தேர்தல் ஆணையமும் ஒப்புதல் அளித்துள்ளது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தன்னிச்சையாக செயல்பட வேண்டிய இந்தியத் தேர்தல் ஆணையம் மோடி அரசின் ஜனநாயகத்திற்கு எதிரான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருப்பது கடும் கண்டனத்திற்குள்ளாகி உள்ளது.

இது தொடர்பான கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தமது கடும் கண்டனத்தை சமூகவலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

அது வருமாறு:-

**வெளிப்படைத்தன்மை கொண்ட தேர்தல் முறையை ஒழிக்கும் வகையில் தேர்தல் நடத்தை விதிகள் 93 (2) (அ)-இல் செய்யப்பட்டுள்ள ஆபத்தான திருத்தத்தால் மக்களாட்சி தனது மிகப்பெரும் அச்சுறுத்தலை ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து எதிர்நோக்கியுள்ளது.**

**குறிப்பிட்ட வாக்குச்சாவடியின் சி.சி.டி.வி. காட்சிப் பதிவுகளை வழங்குமாறு பஞ்சாப் - மற்றும் ஹரியானா உயர்நீதி மன்றம் பிறப்பித்த உத்தரவை அடுத்து, சி.சி.டி.வி. பதிவுகள் மற்றும் தேர்தல் தொடர்பான பிற ஆவணங்கள் பொது ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் ஒன்றிய அரசானது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையான கூறுகளுள் ஒன்றினை அழித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் பயம் ஹரியானா மாநிலத் தேர்தலோடு நிற்கவில்லை, அண்மையில் மகாராஷ்டிர மாநிலத்தில் அவர்கள் தேர்தலின் புனிதத்தன்மையைக் கெடுத்துப் பெற்ற பொய்யான வெற்றி தீவிரமான எதிர்ப்புக்கு ஆளாகியிருப்பதால் அடைந்துள்ள பதற்றத்தின் எதிரொலிப்பாகவே இது அமைந்துள்ளது.**

**தனது அமைப்பின் சுதந்திரத்துக்காகப் போராடுவதற்குப் பதிலாகத் தேர்தல் ஆணையமும் பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான அரசின் அழுத்தத்துக்கு மனமுவந்து பணிந்திருப்பதும், நேர்மையான - நியாயமான தேர்தல் எனும் தனது குழந்தையையே அது உருக்குலைத்திருப்பதும் அதிர்ச்சியளிக்கிறது.**

**நம் நாட்டில் சுதந்திரமான - நியாயமான தேர்தல்கள் நடைபெறுவதன் மீது தொடுக்கப்பட்டுள்ள மக்களாட்சிக்கு விரோதமான இந்தத் தாக்குதலை எதிர்க்க பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## கூகுள் நிறுவனத்தில் ஆட்குறைப்பு:

# 10 சதவீதம் ஊழியர்கள் வேலையை இழக்கின்றனர்!

*நியூயார்க், டிச. 24 -*

*கூகுள் நிறுவனத்தில் ஆட்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த நிறுவனத்தில் 10 சதவீதம் ஊழியர்கள் வேலையை இழக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.*

*இன்றைய நாட்களில் கூகுள் இல்லாமல் உலக இயக்கமே இல்லை என்ற நிலை உருவாகி விட்டது. எந்தத் தேவைக்கென்றாலும் உடனடியாக செல்போன் மூலம் கூகுள் செய்து பார்ப்பது வழக்கமாகிவிட்டது. உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான பணியாளர்களை கொண்டு கூகுள் நிறுவனம் இயங்கி வருகிறது. இதன் தலைமைச் செயல் அதிகாரியாக தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட சுந்தர் பிச்சை செயல்பட்டு வருகிறார்.*

*இந்நிலையில் கூகுள் நிறுவனத்தில் 10 சதவீத ஊழியர்களை ஆட்குறைப்பு செய்யப் போவதாக நிறுவனம் அறிவித்துள்ளது. நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் உள்ள ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படவுள்ளனர். மேலாளர், இயக்குநர், துணைத்தலைவர் போன்ற பதவிகளில் உள்ளவர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுவார்கள் என கூகுள் நிறுவன செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது, “நிறுவனத்தின் செயல் திறனை இரட்டிப்பாக மாற்றுவதற்காக இந்த ஆட்குறைப்பு செய்யப்படுகிறது. நிர்வாகப் பிரிவில் உள்ள சிலர் ஆட்குறைப்பு செய்யப்பட்டு அனுப்பப்படவுள்ளனர். சிலரது பணிநிலை வேறு பிரிவுகளுக்கு மாற்றப்படுகிறது” என்றார்.*

*கூகுள் நிறுவனத்தின் தலைமை நிறுவனமான ஆல்பபெட் நிறுவனம் கடந்த 2023ம் ஆண்டு ஜனவரியில் 12 ஆயிரம் ஊழியர்களை நீக்கியது. அதைத் தொடர்ந்து தற்போது நிர்வாகப் பிரிவில் உள்ள 10 சதவீதம் ஊழியர்களை ஆட்குறைப்பு செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டில் மட்டும் 4 முறை ஆட்குறைப்பு பணியை கூகுள் நிறுவனம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.*

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் — பள்ளிகளில்

# ரூ.99.68 கோடியில் 400 வகுப்பறைக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 24-

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.99.68 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்து, அலுவலர்களின் பயன்பாட்டிற்காக ரூ.8.46 கோடி மதிப்பிலான 95 வாகனங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களில் 64 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், என மொத்தம் 99 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

### புதிதாகக் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CFSIDSI) கீழ், கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 171 பள்ளிகளில் 56.11 கோடி ரூபாய் செலவில் 350 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள்;

அரசுப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் (RBIOCGS) திட்டத்தின் கீழ், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 24 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 8.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள்;

என மொத்தம் 21 மாவட்டங்களிலுள்ள 195 பள்ளிகளில் 64.44 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### புதிதாகக் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்

ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்க வருகை தரும் பொது மக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறை யாக அறிமுகப்படுத்தப் பட்டது. அதன்படி, தற்போது வரை 314 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 274 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்